செய்தி வெளியீடு எண் : 1376 நாள் : 10.08.2022

# செய்தி வெளியீடு

சென்னை – திருச்சி பிரிவு (தே.நெ.45) சாலையில், ஆத்தூர் சுங்கச் சாவடியினை அடுத்து விழுப்புரம் மாவட்டத்தில், ஓங்கூர் அருகே பழுது பார்க்கப்பட்டு வரும் பழைய சிறுபாலத்தின் தற்போதைய நிலை குறித்து, இரண்டாவது முறையாக, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் இன்று (10.08.2022) ஆய்வு செய்தார்.

---

சென்னையில் இருந்து தென்மாவட்டங்களுக்கு செல்லும் அனைத்து போக்குவரத்து பேருந்துகளும், இந்த பாலத்தின் வழியாகதான் செல்கிறது. எனவே, இப்பாலப் பணிகளை இரண்டாவது முறையாக மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் இன்று (10.08.2022) ஆய்வு செய்தார்.

சென்னை–திருச்சி (தேசிய நெடுஞ்சாலை எண்.45ல் கி.மீ.104/050) சாலையில் இடது புறம் அமைந்துள்ள பழைய பாலம் 13.080 மீட்டர் அகலமுள்ள, 4 கண்கள் (Spans) கொண்ட இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வாயிலாக, நான்கு வழிச்சாலையாக, அகலப்படுத்தும்போது, பழைய பாலத்திற்கு இணையாக ஒரு புதிய பாலம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

இந்தப் பழைய பாலத்தின் ஓடுதளம் 8.50 மீட்டர் அகலம் கொண்ட 3 T.beam-களுடன் கட்டப்பட்ட வலதுபுறம் ஓரத்தில் உள்ள T.beam இடம் பெயர்ந்ததன் காரணமாக, அதிக வாகன எடையினால் (pier cap-க்கு), அதிர்வு ஏற்பட்டு இதன் கீழுள்ள தாங்கு தகடு (bearing) சேதமடைந்து, சீரற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

வாகனப்போக்குவரத்து முழுவதும் வலப்புறம் உள்ள புதிய பாலத்தில், 28.07.2022 அன்று முதல் திருப்பிவிடப்பட்டு, பழுதுபார்க்கும் பணிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மூலம் நடைபெற்று வருகிறது.

தற்போது, 12 தாங்கு தகடுகள் (bearings) நிறுவும் பணிகள் முடிவடைந்து விட்டது. மேலும், 2 விரிவடையும் தன்மை கொண்ட இணைப்புகள்

(Expansion joints), நிறுவும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. மீதமுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**“இப்பணிகள் அனைத்தும் வருகிற 17.08.2022க்குள் பணிகளை முடித்து, இப்பாலத்தின் வழியாக போக்குவரத்து துவக்கப்படும்“ என்று மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வின் போது, தேசிய நெடுஞ்சாலை ஆணைய திட்ட இயக்குநர் திரு.சைதன்யா அவர்கள், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் திரு.ந.பாலமுருகன், கண்காணிப்பு பொறியாளர் திரு.சுரேஷ் மற்றும் கோட்டப் பொறியாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

*************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in